# ICAR-NBAIR, Bengaluru conducted TSP Program in Collaboration with KVK, TNAU, Papparapatti, Dharmapuri Tamil Nadu on 23rd March, 2023



## மலைவாழ் மக்களுக்கு தேனீ வளர்ப்பு, பூச்சி மேலாண்மை திறன் மேம்பாட்டுப் பயிற்சி

பென்னாகரம், மார்ச் 23: பாப்பாரப்பட்டி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் மலைவாழ் மக்களுக்கான தேனீ வளர்ப்பு மற்றும் பூச்சி மேலாண்மை குறித்த திறன் மேம்பாட்டுப் பயிற்சி முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது.

தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டி வேளாண்மை மற்றும் அறிவியல் நிலையத்தில் நடைபெற்ற பயிற்சி முகாமை பெங்களூருவில் உள்ள தேசிய வேளாண் பூச்சி ஆராய்ச்சி மைய இயக்குநர் சுசீல் தொடங்கி வைத்தார். வேளாண் அறிவியல் நிலைய தலைவர் வெண்ணிலா வரவேற்றார். பயிற்சி முகாமில் பூச்சி ஆராய்ச்சி மைய இயக்குநர் சுசீல் பேசியதாவது:

மத்திய அரசு மலைவாழ் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த சிறப்பு திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. விவசாயிகள் பூச்சிகளை கட்டுப்படுத்துவதற்கு நச்சு ரசாயன உரங்களை பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். சுற்றுச்சூழலுக்கும், நமது உடல் நலத்திற்கும் தீங்கு விளைவிக்காத புதிய முறைகளை பின்பற்ற வேண்டும். சூரிய சக்தி மின் விளக்கு பொறி மூலம் பூச்சிகளைக் கவர்ந்து அவற்றை அழிக்க முடியும். அழிக்கப்பட்ட பூச்சிகளை கோழிகளுக்கு உணவாக வழங்குவதால், கோழிகளுக்கு சத்து மிக்க உணவாகும். இது போன்ற சுற்றுச்சூழலுக்கு ஏற்ற பூச்சி மேலாண்மை தொழில்நுட்பங்களை விவசாயிகள் தெரிந்து கொண்டு அவற்றை பயன்படுத்த வேண்டும்.



பாப்பாரப்பட்டி வேளாண் அறிவியல் நிலையத்தில் தேனீ வளர்ப்பு, பூச்சி மேலாண்மை பயிற்சியில் மலைவாழ் மக்களுக்கு உபகரணங்களை வழங்கும் பூச்சி ஆராய்ச்சி மைய இயக்குநர் சுசீல். உடன் வேளாண் அலுவலர்கள்.

தேனீ, பூச்சி இனங்களில் மிகவும் உன்னதமான பூச்சியாகும். விவசாயிகளுக்கு மறைமுகமாக மகரந்த சேர்க்கையில் பேருதவி புரிகின்றன. விவசாயிகள் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தாலும் அவர்களது நலனுக்காக தேனீ ஓயாமல் உழைத்துக் கொண்டிருக்கிறது. கொத்தமல்லி, கடுகு, துவரை போன்ற பயிர்களிலும், காய்கள் மற்றும் பழங்கள் உற்பத்தியில் மகரந்த சேர்க்கை மூலம் விவசாயிக்கு மறைமுகமான உதவியை தேனீக்கள் செய்கின்றன. விவசாயிகளிடம் அனைத்து மட்டத்திலும் பூச்சி மேலாண்மை குறித்த விழிப்புணர்வு தேவை.

நமக்கு நன்மை செய்யும் பூச்சிகளை நாம் தெளிக்கும் ரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகள் அழித்து விடுகின்றன. காலை நேரத்தில் நாம் பயிர்களுக்கு தெளிக்கும் ரசாயன பூச்சிக் கொல்லி மருந்து நன்மை செய்யும் பூச்சிகளைக் கொன்று விடும். பூச்சிக்கொல்லி மருந்து தெளிப்பதை மாலை நேரத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இந்திய அரசு கேட்டுக் கொண்டதற்கு இணங்க 2023 ஆம் ஆண்டை சர்வதேச சிறுதானிய ஆண்டாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது. சிறுதானியங்கள் ஊட்டச்சத்து மிகுந்த உணவு ஆகும். இதை ஏழைகள்தான் சாப்பிடுவார்கள் என்ற கண்ணோட்டம் உள்ளது. உண்மையில் சிறுதானிய உணவை சாப்பிடுபவர்கள் செல்வம் படைத்தவர்கள். உணவில் காய்கறிகள், கீரைகள் மற்றும் பழங்களை சேர்த்துக் கொள்ள வேண்டும்.

விவசாயத்தில் பூச்சிகளை மேலாண்மை செய்வதில் புதிய தொழில் நுட்பங்களை பின்பற்றுவது குறித்து விவசாயிகளிடம் விழிப்புணர்வு தேவை. வேளாண்மை அறிவியல் மையம் போன்ற மையங்களில் உள்ள படித்த விஞ்ஞானிகளிடம் அவற்றைத் தெரிந்து கொண்டு விவசாயிகள் அவற்றை பயன்படுத்த வேண்டும் என்றார்.

இந்தப் பயிற்சி முகாமில் மலைவாழ் பழங்குடி இனத்தைச் சேர்ந்த 150 நபர்களுக்கு வேளாண் இடுபொருட்கள் விதைகள், உயிர் உரங்கள், சூரிய சக்தி மின்விளக்கு, பூச்சி கவரும் பொறி உள்ளிட்ட உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் வேளாண்மை அறிவியல் நிலைய பூச்சிகள் மற்றும் மண்ணியல் துறை பேராசிரியர்கள், விஞ்ஞானிகள் சிவக்குமார், கந்தன், ராஜா, சம்பத்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். இறுதியில் பேராசிரியர் தங்கதுரை நன்றி தெரிவித்தார்.

---

### பாப்பாரப்பட்டி வேளாண்மை அறிவியல் நிலையத்தில்

## மலைவாழ் மக்களுக்கு தேனீ வளர்ப்பு பயிற்சி

பாப்பாரப்பட்டி, மார்ச்.24-

பாப்பாரப்பட்டி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் மலைவாழ் மக்களுக்கான தேனீ வளர்ப்பு மற்றும் பூச்சி மேலாண்மை குறித்த திறன் மேம்பாட்டு பயிற்சி முகாம் நடைபெற்றது. முகாமை சுசீல் தொடங்கிவைத்தார். வேளாண் அறிவியல் நிலைய தலைவர் வெண்ணிலா வரவேற்றார். பயிற்சி முகாமில் பூச்சி ஆராய்ச்சி மைய இயக்குனர் சுசீல் பேசியது. முகாமில் மலைவாழ் பழங்குடி இனத்தைச் சேர்ந்த 150 பேர் கலந்து கொண்டனர். அவர்களுக்கு வேளாண் இடுபொருட்கள் விதைகள் உயிர் உரங்கள் சோலார் மின்விளக்கு பூச்சி கவரும் பொறி உள்ளிட்ட உபகரணங்கள் வழங்கப்பட்டது. இதில் வேளாண்மை அறிவியல் நிலைய பூச்சிகள் மற்றும் மண்ணியல் துறை பேராசிரியர்கள் சிவக்குமார், கந்தன், ராஜா, சம்பத்குமார், தங்கதுரை கலந்து கொண்டனர்.